Judicial Form No.60

CALENDAR AND JUDGMENT

(For use in cases whether there are more accused persons than one)

District of Tenkasi

Calendar of cases tried by the Judicial Magistrate of Tenkasi.

| Date of offence | Date of Report of complaint | Remand or surrender of accused | Release on bail | Commence ment of trial | close of trial | Sentence of order |
|---|---|---|---|---|---|---|
| 17.01.2019 | 18.01.2019 | 20.01.2019 | 20.01.2019 | 28.07.22 | 09.07.26 | 15.07.26 |
| C.S.D. 18.01.19 | Explanation of Delay and Remarks: NIL | | | | | |
| C.S.F.D.29.06.21 | | | | | | |
| D.Cogni.29.06.21 | | | | | | |
| A.P.D. 28.07.22 | | | | | | |

Judgment in CC 131/2024 on the file of the Judicial Magistrate of Tenkasi.

Complainant: The Inspector of Police, Kadayam P.S in Cr.No.16/2019

| Name of the Accused | Age | Fathers/Husband's Name |
|---|---|---|
| Velladurai | 1983 | Marimuthu |

| Caste or Religion | Calling | Residence | Police Station |
|---|---|---|---|
| Hindu | Coolie | Sankarankovil | Kadayam |

**Offence :** U/s 279, 337, 304(A) IPC

**Framing of Charges :** Accused is found not guilty Sec.279, 337, 304(A) IPC and the accused is acquitted Sec.255(1) of Crpc.,

MUTHU LAKSHMI

Digitally signed by MUTHU LAKSHMI
Date: 2026.07.15 19:55:33 +0530

Judicial Magistrate,

Tenkasi.

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி
முன்னிலை:திருமதி.எஸ்.முத்து லெட்சுமி, பி.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர், தென்காசி.
2026 ம் வருடம் ஜூலை திங்கள் 15 ம் நாள் புதன்கிழமை
ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 131/2024
CNR.No.TNTS02-002925-2024

அரசுக்காக_காவல் ஆய்வாளர்,
கடையம் கா.நி.கு.எண் 16/2019 ... குற்றமுறையீட்டாளர்

/எதிர்/

வெள்ளத்துரை, 1983,
த.பெ.மாரிமுத்து,
எண்.2/48, அரியநாயகிபுரம்,
சங்கரன்கோவில் ... எதிரி

இவ்வழக்கு 29.06.2021 அன்று அம்பாசமுத்திரம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.195/2021 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு வழக்கானது நிலுவையில் இருந்த போது, திருநெல்வேலி மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தின் A.No.42/2024, நாள் 02.02.2024 ன்படி இந்நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யப்பட்டு, கடந்த 22.03.2024 அன்று ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.131/2024 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு, இறுதியான விசாரணைக்காக இன்று இந்நீதிமன்றத்தின் முன்னர் வரப்பெற்று முறையீட்டாளருக்காக அரசு உதவி வழக்கறிஞர் நிலை 2 தென்காசி அவர்கள் ஆஜராகியும், எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.M.காசிம் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும் கேட்டு சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும் பின்வரும் ....

## தீர்ப்புரை

**அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு :-**

இவ்வழக்கின் புகார்தாரரான வாகன விபத்தில் காயம்பட்ட 1 வது சாட்சி பொங்கல் பண்டிகைக்காக ஊருக்கு வந்திருந்த சமயம், 1 வது சாட்சியின் நண்பரான இவ்வழக்கின் வாகன விபத்தில் இறந்துபோன ஹரிராமகிருஷ்ணன் என்ற ராஜா என்பவருக்கு சாப்பாடு வாங்குவதற்காக 17.01.2019 ம் தேதி பொங்கல் புதூர் A1 புரோட்டா கடைக்கு சென்று சாப்பாடு வாங்கிக் கொண்டு திரும்ப கடையம் வருவதற்காக ஹரிராமகிருஷ்ணன் என்ற ராஜா என்பவருக்கு சொந்தமான TN 76 AW 6688 என்ற பதிவெண் கொண்ட புல்லட் மோட்டார் சைக்கிளில் இரவு சுமார் 10.15 மணிக்கு

பொட்டல் புதூர் to கடையம் மெயின் ரோட்டில் தெற்கிலிருந்து வடக்காக ரஹமத் நகர் A.J.M காம்ப்ளக்ஸ்க்கு சற்று வடபுறம் ரோட்டின் இடது புறமாக வந்து கொண்டிருந்த போது ஹரிராமகிருஷணன் என்ற ராஜா ஓட்டி வந்த புல்லட் மோட்டார் சைக்கிளுக்கு எதிரே வந்த எதிரி TN 20 G 1650 என்ற பதிவெண் கொண்ட 108 ஆம்புலன்ஸ் வண்டியை வடக்கிலிருந்து தெற்காக அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ரோட்டின் வலது பக்கமாக ஓட்டி வந்து, ஹரிராமகிருஷணன் என்ற ராஜா ஓட்டி வந்த புல்லட் மீது நேராக மோதி விபத்து உண்டு பண்ணியதில், ஹரிராமகிருஷணன் என்ற ராஜாவும் பின்னால் உட்கார்ந்து சென்ற 1வது சாட்சியும் பைக்கிலிருந்து கீழே விழுந்ததில் 1வது சாட்சிக்கு கீழ் உதடு, இடது கால் கரண்டை, நெஞ்சு ஆகிய இடங்களில் சிறுகாயத்தை ஏற்படுத்தியும், ஹரிராமகிருஷணன் என்ற ராஜாவுக்கு முகத்தில் பலத்த ரத்தக்காயத்தை ஏற்படுத்தி மரணத்தை ஏற்படுத்தியதாகவும், எனவே, எதிரி இதச பிரிவுகள் 279, 337, 304(A)ன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக எதிரி மீது கடையம் காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரி இந்நீதிமன்றத்திலிருந்து பிரிவு 204 கு.வி.மு.ச.வின் கீழ் அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பேரில் ஆஜரானதும், வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207ன் கீழ் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

3. ஆலோசனை செய்ய அவகாசம் கொடுக்கப்பட்ட பின்னர் எதிரி இதச பிரிவுகள் 279, 337, 304(A)ன் கீழ் உள்ள தண்டனைக்குரிய குற்றங்களின் சாராம்சம் குறித்து பிரிவு 251ன் கீழ் அதனை விளக்கி வினவியபோது அவர் தான் குற்றவாளி இல்லை என்று மறுத்துரைத்தார். எனவே, அரசு தரப்பு சாட்சியங்களை விசாரணை செய்ய பிரிவு 254 கு.வி.மு.ச.வின் படி அரசு தரப்பு சாட்சிகளை ஆஜர்படுத்த அழைப்பாணை அனுப்ப இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டது.

4. இந்த வழக்கில் எதிரிக்கு எதிரான குற்றங்களை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் 9 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, 11 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன, சான்றுப் பொருள்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு</u> :-

கடந்த 18.01.2019ம் தேதி 6.00 மணிக்கு தலைமைக் காவலர் தனுஷ்கோடி

என்பவர் நிலையப் பொறுப்பில் இருக்கும் போது ஆறுமுகம் என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலையக் குற்ற எண்.16/2019, இதச பிரிவுகள் 279, 337, 304(A)ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளதாகவும், அந்த முதல் தகவலறிக்கை அ.சா.ஆ.3 என்றும், நகலை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட விசாரணை அதிகாரி 18.01.2019ம் தேதி காலை 07.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சரவணன், சங்கர் முன்னிலையில் சம்பவ இடத்தையும், அதன் சுற்றுப்புறத்தையும், பார்வையிட்டு அ.சா.ஆ.4 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளதாகவும், அதன்பின் அவர்கள் இருவரையும் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், அதன்பின் சம்பவ சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், அதன்பின் அன்றே அம்பாசமுத்திரம் அரசு மருத்துமனைக்கு 09.00 மணிக்கு சென்று இவ்வாகன விபத்து வழக்கில் இறந்துபோன ஹரிராமகிருஷ்ணன் என்ற ராஜா என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை ஆரம்பித்து 10.30 மணிக்கு பிரேத விசாரணையை முடித்து சடலக்கூறாய்வு வேண்டுதல் விண்ணப்பத்துடன், தலைமைக் காவலர் ராமசுப்பிரமணியன் என்பவரை பணி நியமனம் செய்து சடலக்கூறாய்வுக்கு பின் நல்லடக்கம் செய்ய உறவினர்களிடம் ஒப்படைக்க செய்ய அறிவுரை செய்தார் என்றும், அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 என்றும், அதன்பின் கடந்த 20.01.2019ம் தேதியன்று நிலையத்தில் வைத்து எதிரியை கைது செய்து தக்க ஜாமீனில் விடுவித்துள்ளதாகவும், பின் விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்களை தென்காசி வட்டார போக்குவரத்து வாகன ஆய்வாளர் திரு.கண்ணன் அவர்களின் விசாரணைக்கு உட்படுத்தி அவரை விசாரித்து அவரிடம் ஆய்வறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், அவர் பதிவு செய்த TN 20 G 1650 என்ற வாகனத்தின் மோட்டார் ஆய்வறிக்கை அ.சா.ஆ.7 மற்றும் TN 76 AW 6688 என்ற வாகனத்தின் மோட்டார் ஆய்வறிக்கை அ.சா.ஆ.8 என்றும், அதன்பின் இறந்து போன நபரின் பிரேதத்தை பரிசோதனை செய்த பிரேத பரிசோதனை மருத்துவர் சுப்புலெட்சுமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து சடலக்கூறாய்வு அறிக்கை அ.சா.ஆ.9 பெற்றுள்ளதாகவும், பின்பு காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் கணேஷ்பாபு என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று

அ.சா.ஆ.10 பெற்றுள்ளதாகவும், பின்னர் எதிரியை பணி நியமனம் செய்து இசக்கிமுத்து என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், அந்த பணி நியமன சான்று அ.சா.ஆ.11 என்றும், அதன்பின் 29.04.2019ம் தேதி இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது. இத்துடன் அரசு தரப்பு வழக்கானது முடிவுற்றது.

6. அரசு தரப்பு சாட்சிய விசாரணை முடிவுற்றவுடன் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களில் எதிரிக்கு எதிராக தோன்றுகின்ற சங்கதிகளை எதிரியிடம் கூறி அது சம்பந்தப்பட்ட பகுதிகளை விளக்கி கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய போது எதிரி பொய்சாட்சி என்று கூறினார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டா ? என்று வினவிய போது, எதிரி சாட்சிகள் இல்லை என்று கூறினார். எனவே, எதிரி தரப்பு முடிக்கப்பட்டது.

7. பின்னிட்டு இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டன. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள், இரு தரப்பு வாதுரைகள் ஆகியவற்றை பரிசீலித்த பின்னர் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரி மீதான இதச பிரிவுகள் 279, 337, 304(A)ன் கீழான குற்றச்சாட்டுகளானது அரசு தரப்பால் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிருபணம் செய்யப்பட்டுள்ளதா ? என்பதேயாகும்.

**8. அரசு தரப்பு வழக்கறிஞர் பின்வருமாறு வாதிட்டார் –**

எதிரியானவர் ஹரிராமகிருஷ்ணன் என்ற ராஜாவுக்கு விபத்து ஏற்படுத்தி இறப்பு உண்டுபண்ணிய செயலானது அ.சா.1 முதல் அ.சா.9 வரையுள்ள சாட்சிகளின் மூலமும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்கள் மூலமும் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் எதிரிக்கு அதிக பட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

**9. எதிரி தரப்பு வழக்கறிஞர் பின்வருமாறு வாதிட்டார் –**

அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகளின் மூலம் அரசு தரப்பு வழக்கானது நிரூபணம் செய்யப்படவில்லை. எனவே, புலன் விசாரணை அதிகாரி சம்பவயிடம் சென்று முறையான புலன் விசாரணை செய்யாமலேயே எதிரிக்கு எதிராக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே, எதிரிக்கு எதிரான குற்றங்கள்

எவ்வகையிலும் நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து எதிரியை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

**<u>10. தீர்வு</u> –**

இவ்வழக்கின் புகார்தாரரான வாகன விபத்தில் காயம்பட்ட 1வது சாட்சி பொங்கல் பண்டிகைக்காக ஊருக்கு வந்திருந்த சமயம், 1வது சாட்சியின் நண்பரான இவ்வழக்கின் வாகன விபத்தில் இறந்துபோன ஹரிராமகிருஷணன் என்ற ராஜா என்பவருக்கு சாப்பாடு வாங்குவதற்காக 17.01.2019 ம் தேதி பொங்கல் புதூர் A1 புரோட்டா கடைக்கு சென்று சாப்பாடு வாங்கிக் கொண்டு திரும்ப கடையம் வருவதற்காக ஹரிராமகிருஷணன் என்ற ராஜா என்பவருக்கு சொந்தமான TN 76 AW 6688 என்ற பதிவெண் கொண்ட புல்லட் மோட்டார் சைக்கிளில் இரவு சுமார் 10.15 மணிக்கு பொட்டல் புதூர் to கடையம் மெயின் ரோட்டில் தெற்கிலிருந்து வடக்காக ரஹமத் நகர் A.J.M காம்ப்ளக்ஸ்க்கு சற்று வடபுறம் ரோட்டின் இடது புறமாக வந்து கொண்டிருந்த போது ஹரிராமகிருஷணன் என்ற ராஜா ஓட்டி வந்த புல்லட் மோட்டார் சைக்கிளுக்கு எதிரே வந்த எதிரி TN 20 G 1650 என்ற பதிவெண் கொண்ட 108 ஆம்புலன்ஸ் வண்டியை வடக்கிலிருந்து தெற்காக அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ரோட்டின் வலது பக்கமாக ஓட்டி வந்து, ஹரிராமகிருஷணன் என்ற ராஜா ஓட்டி வந்த புல்லட் மீது நேராக மோதி விபத்து உண்டு பண்ணியதில், ஹரிராமகிருஷணன் என்ற ராஜாவும் பின்னால் உட்கார்ந்து சென்ற 1வது சாட்சியும் பைக்கிலிருந்து கீழே விழுந்ததில் 1வது சாட்சிக்கு கீழ் உதடு, இடது கால் கரண்டை, நெஞ்சு ஆகிய இடங்களில் சிறுகாயத்தை ஏற்படுத்தியும், ஹரிராமகிருஷணன் என்ற ராஜாவுக்கு முகத்தில் பலத்த ரத்தக்காயத்தை ஏற்படுத்தி மரணத்தை ஏற்படுத்தியதாகவும், எனவே, நடவடிக்கை எடுக்கக் கோரி புகார் கொடுக்கப்பட்டதாகவும் புகாரில் சொல்லப்பட்டுள்ளது.

11. அ.சா.1 ஆறுமுகம், தனது சாட்சியத்தில், எதிரி வெள்ளத்துரை என்பவரை தெரியாது என்றும், சாட்சிகள் முகமது அலாவுதீன், இசக்கி, உடையம்மாள் ஆகியோர்களை தெரியும் என்றும், வழக்கில் இறந்து போன ஹரிராமகிருஷ்ணன் என்ற ராஜா தன் நண்பர் என்றும், கடந்த 7 வருடங்களுக்கு முன்பு இரவு 8 மணியளவில் தானும், தன் நண்பர் ஹரிராமகிருஷ்ணன் என்ற ராஜாவும் சாப்பாடு வாங்கிவிட்டு

ராஜாவின் இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்ததாகவும், இருசக்கர வாகனத்தை ராஜா ஓட்டினார் என்றும், முதலியார்பட்டியில் உள்ள ரயில்வே கேட் அருகே 108 ஆம்புலன்ஸ் மோதி விபத்து ஏற்பட்டது என்றும், தான் கீழே விழுந்து விட்டதாகவும், தனக்கு உதடு, கை, கால்களில் காயம் ஏற்பட்டது என்றும், ராஜா சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார் என்றும், பின்னர் தான் ஆம்புலன்சில் அம்பாசமுத்திரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றதாகவும், தனக்கு வெளிநோயாளியாக சிகிச்சை செய்தனர் என்றும், பின்னர் நடவடிக்கை எடுக்க காவல் நிலையம் சென்று புகார் கொடுத்ததாகவும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனு தான் கொடுத்தது தான் என்றும், அதில் இருக்கும் கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அந்த புகார் மனு அ.சா.ஆ.1 என்றும், 108 ஆம்புலன்ஸை ஓட்டியது யார் என்று தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

12. அ.சா.2 செல்வராஜ், தனது சாட்சியத்தில், எதிரி வெள்ளத்துரை என்பவரை தனக்கு தெரியாது என்றும், அ.சா.1 ஆறுமுகம் என்பவரை தெரியும் என்றும், சாட்சிகள் முகமது அலாவுதீன், இசக்கி, உடையம்மாள் ஆகியோர்களை தெரியும் என்றும், வழக்கில் இறந்து போன ஹரிராமகிருஷ்ணன் என்ற ராஜா தன் மகன் என்றும், கடந்த 7 வருடங்களுக்கு முன்பு இரவு 8, 8.30 மணியளவில் முதலியார்பட்டியில் உள்ள ரயில்வே கேட் அருகே 108 ஆம்புலன்ஸ் மோதி விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டதாகவும், தன் மகனும், ஆறுமுகம் இருசக்கர வாகனத்தில் வரும் போது விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டதாகவும், அம்பாசமுத்திரம் அரசு மருத்துவமனை சென்று பார்த்ததாகவும், தன் மகன் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார் என்றும், ஆம்புலன்சை ஓட்டிய நபர் யார் என்று தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

13. அ.சா.3 முருகேசன், தனது சாட்சியத்தில், எதிரி வெள்ளத்துரை என்பவரை தனக்கு தெரியாது என்றும், அ.சா.1 ஆறுமுகம், அ.சா.2 செல்வராஜ் ஆகியோர்களை தெரியும் என்றும், சாட்சிகள் முகமது அலாவுதீன், இசக்கி, உடையம்மாள் ஆகியோர்களை தெரியும் என்றும், வழக்கில் இறந்து போன ஹரிராமகிருஷ்ணன் என்ற ராஜா என்பவரை தெரியும் என்றும், கடந்த 7 வருடங்களுக்கு முன்பு இரவு சாப்பிடுவதற்காக ஹரிராமகிருஷ்ணன் புல்லட் இருசக்கர

வாகனத்தில் சென்றபோது திருமலைபுரம் வளைவில் ஆம்புலன்ஸ் மோதி விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டதாகவும், தான் சம்பவ இடத்திற்கு வருவதற்குள் அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் என்றும், பின்னர் அவர் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார் என்றும், ஆம்புலன்சை ஓட்டிய நபர் யார் என்று தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

14. அ.சா.4 செல்லப்பா, தனது சாட்சியத்தில், எதிரி வெள்ளத்துரை என்பவரை தெரியாது என்றும், அ.சா.1 ஆறுமுகம், அ.சா.2 செல்வராஜ், அ.சா.3 முருகேசன் ஆகியோர்களை தெரியும் என்றும், சாட்சிகள் முகமது அலாவுதீன், இசக்கி, உடையம்மாள் ஆகியோர்களை தெரியும் என்றும், வழக்கில் இறந்து போன ஹரிராமகிருஷ்ணன் என்ற ராஜா என்பவரை தெரியும் என்றும், கடந்த 7 வருடங்களுக்கு முன்பு இரவு சாப்பிடுவதற்காக ஹரிராமகிருஷ்ணன் புல்லட் இருசக்கர வாகனத்தில் சென்ற போது திருமலைபுரத்தில் வைத்து 108 ஆம்புலன்ஸ் மோதி விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டதாகவும், தான் தென்காசி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்ததாகவும், அவர் இறந்து விட்டார் என்றும், ஆம்புலன்சை ஓட்டிய நபர் யார் என்று தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

15. அ.சா.5 முகமது அலாவுதீன், தனது சாட்சியத்தில், எதிரி வெள்ளத்துரை என்பவரை தெரியும் என்றும், அ.சா.1 ஆறுமுகம், அ.சா.2 செல்வராஜ், அ.சா.3 முருகேசன், அ.சா.4 செல்லப்பா ஆகியோர்களை தெரியும் என்றும், சாட்சிகள் இசக்கி, உடையம்மாள் ஆகியோர்களை தெரியும் என்றும், வழக்கில் இறந்து போன ஹரிராமகிருஷ்ணன் என்ற ராஜா என்பவரை தெரியும் என்றும், தேதி, மாதம் நினைவில் இல்லை என்றும், கடந்த 7 வருடங்களுக்கு முன்பு இரவு 10.15 மணியளவில் தான் கடைக்கு இருந்து 150மீ தொலைவில் ரகுமத் நகரில் 108 ஆம்புலன்ஸ் ராஜா ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அந்த 108 ஆம்புலன்ஸை யார் ஓட்டினார் என்று தெரியாது என்றும், பின்னர் வாடகை வண்டியில் ராஜாவை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

16. அ.சா.6 சங்கரன், தனது சாட்சியத்தில், சாட்சி சரவணன் என்பவரை தெரியாது என்றும், தற்போது தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள

இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 தன்னுடையது தான் என்றும், கடந்த 5,6 வருடங்களுக்கு முன்பு போலிசார் தங்கள் ஊருக்கு வந்து கையொப்பம் கேட்டார்கள் என்றும், தான் செய்து கொடுத்ததாகவும், இந்த வழக்கை பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

17. அ.சா.7 இசக்கி, தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரியை தெரியாது என்றும், அ.சா.1 ஆறுமுகம், அ.சா.2 செல்வராஜ், அ.சா.3 முருகேசன், அ.சா.4 செல்லப்பா ஆகியோர்களை தெரியாது என்றும், அ.சா.5 முகமது அலாவுதின் என்பவரை தெரியும் என்றும், சாட்சி உடையம்மாள் என்பவரை தெரியாது என்றும், வழக்கில் இறந்துபோன ஹரிராமகிருஷ்ணன் என்ற ராஜா என்பவரை தெரியாது என்றும், தேதி, மாதம் நினைவில் இல்லை என்றும், கடந்த 8,9 வருடங்களுக்கு முன்பு முதலியார்பட்டியில் டீ குடித்துவிட்டு தான் காலையில் வந்து கொண்டிருந்தபோது ஒரு நபர் கீழே விழுந்து கிடந்தார் என்றும், அந்த நபர் எப்படி கீழே விழுந்தார் என்று தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

18. அ.சா.8 உடையம்மாள், தனது சாட்சியத்தில், இதற்கு முன்பு 108 ஆம்புலன்சில் அவசர மெடிக்கல் டெக்னிசியனாக வேலை பார்த்ததாகவும், ஆஜர் எதிரியை தெரியும் என்றும், தன்னுடன் வேலை பார்த்தவர் என்றும், அ.சா.1 ஆறுமுகம், அ.சா.2 செல்வராஜ், அ.சா.3 முருகேசன், அ.சா.4 செல்லப்பா, அ.சா.5 முகமது அலாவுதின், அ.சா.7 இசக்கி ஆகியோர்களை தெரியாது என்றும், வழக்கில் இறந்துபோன ஹரிராமகிருஷ்ணன் என்ற ராஜா என்பவரை தெரியாது என்றும், தேதி, மாதம் நினைவில் இல்லை என்றும், கடந்த 2019 ம் வருடம் வியாழக்கிழமை அன்று தானும், ஆஜர் எதிரியும் 108 ஆம்புலன்சில் நோயாளியை மருத்துவமனைக்கு அழைத்து வருவதற்காக கடையம் இரயில்வே கேட் தாண்டி சென்று கொண்டிருந்தபோது 108 ஆம்புலன்சை ஆஜர் எதிரி ஓட்டினார் என்றும், இரயில்வே கேட் போட்டிருந்தார்கள் என்றும், கேட்டை திறந்ததும் 100 மீட்டர் அளவில் ஒரு நபர் புல்லட் இருசக்கர வாகனத்தில் எதிரே வந்து 108 ஆம்புலன்சில் மோதிவிட்டார் என்றும், இருசக்கர வாகனத்தில் வந்த நபருக்கு முதலுதவி சிகிச்சை அளித்ததாகவும், பின்னர் அந்த நபரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றும், தானும் ஆஜர் எதிரியும் காவல் நிலையத்திற்கு சென்றதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

19. மேற்கண்ட சாட்சியத்திலிருந்து பார்க்கும் போதும், அ.சா.ஆ.1 புகார், அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை, அ.சா.ஆ.6 பிரேத விசாரணை அறிக்கை, அ.சா.ஆ.9 சடலக்கூறாய்வு அறிக்கை ஆகியவற்றை வைத்துப் பார்க்கும் போது வாகன விபத்தில் ஹரிராமகிருஷ்ணன் என்ற ராஜா இறந்து போனார் என்பது அரசு தரப்பில் தகுநிலை சந்தேகத்திற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

20. இந்த வழக்கில் எதிரியின் கவனக்குறைவான மற்றும் அசட்டுத் துணிச்சலான செயலினால் தான் ஹரிராமகிருஷ்ணன் என்ற ராஜா இறந்து போனார் என்று அரசு தரப்பில் எல்லா தகுநிலை சந்தேகத்திற்கும் அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பது ஆராயப்பட வேண்டும். இந்த வழக்கில், அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் தங்களது சாட்சியத்தில், எதிரி தான் மேற்படி விபத்தை ஏற்படுத்தி ஹரிராமகிருஷ்ணன் என்ற ராஜாவுக்கு இறப்பு ஏற்படுத்தினார் என்று எந்தவித சாட்சியமும் அளிக்கவில்லை. மேலும், அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள், எதிரி குறித்தோ, எதிரி ஓட்டி வந்த வாகனம் குறித்தோ, எதிரி வாகனம் ஓட்டி வந்த விதம் குறித்தோ எந்த சாட்சியமும் அளிக்கவில்லை. மேலும், எதிரிதான் தனது கவனக்குறைவு அல்லது அசட்டுத் துணிச்சலான செயலினால் தான் விபத்து ஏற்படுத்தி ஹரிராமகிருஷ்ணன் என்ற ராஜாவுக்கு இறப்பு ஏற்பட்டது என்றும் சாட்சியம் அளிக்காமல் இருப்பதால் அரசு தரப்பில் எதிரிக்கு எதிராக சாட்டப்பட்ட குற்ற செயல்களை நிரூபணம் செய்வதற்கு போதிய சாட்சியங்கள் இந்த நீதிமன்றத்தில் முன் வைக்கப்படவில்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

21. இந்த வழக்கில், புலன் விசாரணை அதிகாரிக்காக சாட்சியம் அளித்த அ.சா.9 தன்னுடைய சாட்சியத்தில், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது குறித்தும், பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்பட்டது குறித்தும், வாகனங்களை தணிக்கைக்கு அனுப்பி ஆய்வறிக்கை பெறப்பட்டது குறித்தும், பிரேத விசாரணை செய்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.9 ன் சாட்சியத்தை மட்டுமே வைத்து கொண்டு எதிரியின் கவனக்குறைவு மட்டும் அசட்டுத் துணிச்சலான வகையில் வாகனம் இயக்கப்பட்டு ஹரிராமகிருஷ்ணன் என்ற ராஜாவுக்கு விபத்து ஏற்பட்டதாக முடிவுக்கு வர முடியாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

22. மேற்சொன்ன விவாதம் காரணங்கள் மற்றும் பரிசீலனையை பார்க்கும்

போது அரசு தரப்பில் எதிரி இதச பிரிவுகள் 279, 337, 304(A)ன் கீழான குற்றங்கள் தகுநிலை ஐயப்பாட்டுக்கு அப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரி குற்றவாளி இல்லை என்று கண்டறிகிறது.

23. முடிவில், எதிரி இதச பிரிவுகள் 279, 337, 304(A)ன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரியை குவிமுச பிரிவு 255(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

24. இவ்வழக்கின் எதிரி கடந்த 20.01.2019ம் தேதியன்று கைது செய்யப்பட்டு, அன்றே காவல்நிலைய பிணையில் சென்றுள்ளார்.

**25. வழக்கு சொத்து** :–

இந்த வழக்கில் சொத்துக்கள் தாக்கல் இல்லை.

இத்தீப்பானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, பின்னர் 2026ம் வருடம் ஜூலை திங்கள் 15ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

MUTHU LAKSHMI
Digitally signed by MUTHU LAKSHMI
Date: 2026.07.15 19:55:50 +0530

நீதித்துறை நடுவர்,
தென்காசி.

**அரசு தரப்பு சாட்சிகள் –**

| | |
|---|---|
| அ.சா.1 | ஆறுமுகம் |
| அ.சா.2 | செல்வராஜ் |
| அ.சா.3 | முருகேசன் |
| அ.சா.4 | செல்லப்பா |
| அ.சா.5 | முகமது அலாவுதீன் |
| அ.சா.6 | சங்கரன் |
| அ.சா.7 | இசக்கி |
| அ.சா.8 | உடையம்மாள் |
| அ.சா.9 | திரு.திருமலைவாஸ், சிறப்பு உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் –**

Judicial Form No.68

| SL No | Description to the exhibit and its date | Date, when the exhibit was filed in the case | How marked | By whom filed | remarks |
|---|---|---|---|---|---|
| 1 | புகார் மனு | 26.05.2026 | அ.சா.ஆ.1 | அ.சா.1 | அசல் |
| 2 | பார்வை மகஜரிலுள்ள அ.சா.6 ன் இரண்டாவது சாட்சி கையொப்பம் | 23.06.2026 | அ.சா.ஆ.2 | அ.சா.6 | அசல் |
| 3 | முதல் தகவல் அறிக்கை | 09.07.2026 | அ.சா.ஆ.3 | அ.சா.9 | அசல் |
| 4 | பார்வை மகஜர் | 09.07.2026 | அ.சா.ஆ.4 | அ.சா.9 | அசல் |
| 5 | மாதிரி வரைபடம் | 09.07.2026 | அ.சா.ஆ.5 | அ.சா.9 | அசல் |
| 6 | பிரேத விசாரணை அறிக்கை | 09.07.2026 | அ.சா.ஆ.6 | அ.சா.9 | அசல் |
| 7 | TN 20 G 1650 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை | 09.07.2026 | அ.சா.ஆ.7 | அ.சா.9 | அசல் |
| 8 | TN 76 AW 6688 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை | 09.07.2026 | அ.சா.ஆ.8 | அ.சா.9 | அசல் |
| 9 | சடலக்கூறாய்வு அறிக்கை | 09.07.2026 | அ.சா.ஆ.9 | அ.சா.9 | அசல் |
| 10 | காயச்சான்று | 09.07.2026 | அ.சா.ஆ.10 | அ.சா.9 | அசல் |
| 11 | பணி நியமனச்சான்று | 09.07.2026 | அ.சா.ஆ.11 | அ.சா.9 | அசல் |

**அரசு தரப்பு சான்றுப் பொருள் –** இல்லை.
**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருள் –** இல்லை

MUTHU LAKSHMI
Digitally signed by MUTHU LAKSHMI
Date: 2026.07.15 19:55:55 +0530

நீதித்துறை நடுவர்,
தென்காசி.

**குறிப்பு :–**

1. எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்தார்.
2. தீர்ப்பு குறித்து காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.
3. அரசு வழக்கறிஞருக்கு தீர்ப்பு நகல் வழங்கப்பட்டது.
4. சாட்சிகளை மூன்று நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
5. வழக்கு குறித்து சொத்து பதிவேட்டில் எழுதப்பட்டது.